## பட்டினமும் சூழலும் பிரதேச சபை - 2022

---------------------------------------------------------------

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பட்டினமும் சூழலும் பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் செலவுக் கணக்கு, காசுப்பாய்ச்சல் கூற்று, உரிமையாண்மை மாறுதலுக்கான கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 172 (1) ஆம் உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எமது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பட்டினமும் சூழலும் பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சலை உள்ளூராட்சி நிறுவனத்திற்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும் கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க உண்மையாக மற்றும் நியாயமாக வெளிப்படுத்துகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நான் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்தினை வெளிப்படுத்துகின்றேன்.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு செய்யப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.
பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர்

மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பதற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களுக்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

  இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கெல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபையின் நிறுவனம் செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்ட ரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் கீழே குறிப்பிட்ட தேவைப்பாடுகள் சம்பந்தமாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

(அ) பிரதேச சபையின் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட சிபார்சுகளானவை சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டு குறைபாடுகள் அவதானிக்கப்பட்டுள்ளன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| அ) | உள்ளுராட்சி திணைக்களம் மற்றும் உதவி உள்ளுராட்சி ஆணையாளர் திணைக்களத்தினால் மீளாய்வாண்டில் அன்பளிப்புச் செய்யப்பட்ட கூட்டுமொத்தம் ரூபா 507,330 ஆன பொருட்கள் உரிய சொத்துக்களின் பெறுமதியுடன் சேர்க்கப்பட்டிருக்கவில்லை. | அடுத்துவரும் ஆண்டின் கணக்குகளில் சீர்செய்யப்படும் | நிலையான சொத்துக்களின் பெறுமதிக்குள் சேர்த்துக் கொள்ளப்படல் வேண்டும். |
| ஆ) | மீளாய்வாண்டில் தலைமை அலுவலகம் மற்றும் உப்புவெளி பொது நூலக புனரமைப்பு ரூபா 1,945,865 தொகைக்கு மேற்கொள்ளப்பட்டிருப்பினும் காணி கட்டடப் பெறுமதிக்குள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | அடுத்துவரும் ஆண்டின் கணக்குகளில் சீர்செய்யப்படும். | கணக்குகளில் சேர்த்துக் கொள்ளப்படல் வேண்டும். |
| இ) | பிரதேச சபையினால் 2021 ஆம் ஆண்டின் போது பொருள் இருப்புக் கணிப்பீட்டு சபையினால் ஏல விற்பனைக்கு சிபார்சு செய்யப்பட்ட 42 பொருட்கள் மீளாய்வாண்டு காலத்தில் ஏல விற்பனை செய்யப்பட்டு ரூபா 155,450 பெறப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் இச் சொத்துக்களின் கிரயப் பெறுமதி கணிப்பிடப்பட்டு கணக்குகளில் உரிய சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | மீளாய்வாண்டில் ஏல விற்பனை செய்யப்பட்ட பொருட்கள், 2015 ஆம் ஆண்டிற்கு முற்பட்ட காலத்தில் கொள்வனவு செய்யப்பட்டுள்ள காரணத்தால் கொள்முதல் பெறுமதியை பெற்றுக்கொள்ள முடியாமல் உள்ளது. இருந்தும் இருப்புப் பதிவேட்டில் கழிப்பிற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | ஏலவிற்பனை செய்யப்பட்ட பொருட்களின் கொள்விலைப் பெறுமதி இனங்காணப்பட்டு சொத்துக்களிலிருந்து நீக்கப்படல் வேண்டும். |
| ஈ) | மீளாய்வாண்டிற்காக பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய நிலையானவைப்பு வட்டி வருமானம் ரூபா 412,705 நிதிக்கூற்றுக்களில் சேர்த்துக் கொள்ளப்படிருக்கவில்லை. | வங்கியினால் வழங்கப்பட்ட தகவல்களுக்கமைவாக வங்கி வட்டி வருமானம் கணக்குகளில் காட்டப்பட்டுள்ளது. மேலும் இனி வருங்காலங்களில் அட்டுறு அடிப்படையிலான கணக்குகள் இங்கு வெளிப்படுத்தப்படும். | குறித்த காலப்பகுதிக்குரிய வருமானங்கள் மற்றும் செலவுகள் உரிய காலப்பகுதிக்கு சாட்டுதல் செய்யப்படல் வேண்டும். |
| உ) | மீளாய்வாண்டின் போது சுகாதார அமைச்சிடமிருந்து கிடைக்கப்பெற்ற ரூபா 1,400,000 பெறுமதியான மருந்துப்பொருட்கள் வருடத்திற்குரிய அரசிறை மானியமாக கணக்கிடப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் ஆண்டுகளில் இவ்வாறான தவறுகள் இடம்பெறாவண்ணம் முழுமையான பதிவுகளுடன் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படும். | குறித்த காலப்பகுதிக்குரிய வருமானங்கள் மற்றும் செலவுகள் உரிய காலப்பகுதிக்கு சாட்டுதல் செய்யப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| ஊ) | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பிரதேச சபையின் கீழ் உள்ள ஆயுர்வேத வைத்தியசாலையின் மருந்துப் பொருட்கள், மின் பொருட்கள், காகிதாதிகள், வாகன டயர்கள் மற்றும் ஏனைய நுகர்வுப் பொருட்களின் பெறுமதி கூட்டுமொத்தம் ரூபா 4,641,291 இனால் குறைத்துக் காட்டப்பட்டுள்ளது. | எதிர் வரும் ஆண்டுகளில் இவ்வாறான தவறுகள் இடம்பெறாவண்ணம் முழுமையான சரியான பதிவுகளுடன் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படும் | இறுதி இருப்பின் பெறுமதியை சரியாக வெளிப்படுத்த உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |
| எ) | மீளாய்வாண்டில் சோலைவரி சேகரிப்பின் வினைத்திறனை அதிகரிப்பதன் நிமித்தம் வழங்கப்பட்ட கழிவு ரூபா 2,473,535 தொகையினை கணக்குகளில் தனியாக காண்பிக்காது சேகரிக்கப்பட்ட சோலைவரியிலிருந்து கழித்துக் காட்டப்பட்டிருந்தது. | எதிர் வரும் காலங்களில் சோலைவரிக்காக வழங்கப்படும் கழிவுகள் சரியான முறையில் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படுவதோடு சரியான பதிவுகளுடன் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படும். | வருமானங்கள் மற்றும் செலவுகள் உரிய காலப்பகுதிக்கு சாட்டுதல் செய்யப்படல் வேண்டும். |

### 1.6.2 கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|
| நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்ட நான்கு பிரதான விடயங்களிற்குரிய (வியாபார உரிமம், சந்தை வாடகை, பணியாளர் கடன் மற்றும் ஆதனவரி நிலுவைகள்) கூட்டுமொத்தம் ரூபா 44,227,124 ஆன மீதிக்கும் அவ்விடயங்களிற்குரிய மூல ஆவணங்களில் காட்டப்பட்ட கூட்டுமொத்தம் ரூபா 44,135,872 ஆன மீதிகளுக்குமிடையே ரூபா 91,252 ஆன தேறிய வேறுபாடு அவதானிக்கப்பட்டுள்ளது. | 2003 ஆண்டிலிருந்து ஏற்பட்ட கணக்கீட்டு தவறுகள் காரணமாக மூல ஆவணத்திற்கும் நிதிக்கூற்றுக்கும் இடையில் வேறுபாடு காணப்படுகின்றது. இதனை சீர்செய்வதற்கென விட்டொழிப்புக் குழுக்கான சபை அனுமதி மற்றும் உள்ளூராட்சி ஆணையாளரின் அனுமதி கிடைக்கப் பெற்றுள்ளது. மேலும் கூட்டங்களை நடாத்தி குழுவின் சிபார்சின் அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | மூல ஆவண மீதியும் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட மீதியும் இணங்கியிருத்தல் வேண்டும். |

### 1.6.3 கணக்காய்விற்காக எழுத்துமூலச் சான்றுகள் இல்லாமை

| வழங்கப்படாத கணக்காய்வுச் சான்றுகள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்ட கூட்டுமொத்தம் ரூபா 261,368,978 பெறுமதியான காணி கட்டிடங்கள், பொறி இயந்திரங்கள், தளபாடங்களும் பொருத்துகளும் மற்றும் அபிவிருத்தி வேலைகள் என்பவற்றை உறுதிப்படுத்துவதற்கு தேவையான காணி உறுதி, நிலையான சொத்துப் பதிவேடு, உரிமையை உறுதிப்படுத்தும் ஆவணம், மீள்மதிப்பீட்டு ஆவணங்கள் மற்றும் பெறுமதியை உறுதிப்படுத்தும் சான்றுகள் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | பதில் வழங்கப்படவில்லை | நிலையான சொத்துக்கள் தொடர்பில் பொருத்தமான சான்றாதாரங்கள் பேணப்படல் வேண்டும். |

### 1.7 இணக்கமின்மைகள்

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மைகள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| 2021.08.16 ஆம் திகதிய PT/03/2021 ஆம் இலக்க மாகாண நிதிச் சுற்றறிக்கை | பிரதேச சபையில் கீழ் பணியாற்றுகின்ற பாதுகாப்புப் பணம் அறவீடு செய்யப்பட வேண்டிய 18 உத்தியோகத்தர் களிடமிருந்து பாதுகாப்பு வைப்புப்பணம் ரூபா 262,500 அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | உத்தியோகத்தர்களிடமிருந்து பாதுகாப்பு பணஅறவீடு செய்வதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | சுற்றறிக்கைக்கமைய உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2022 திசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமானம் ரூபா 35,031,797 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொப்பான முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமானம் ரூபா 44,237,824 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

சபையின் தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் படி மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம், நிலுவை வருமானம் என்பன தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான விடயம் | மதிப்பிடப் பட்ட வருமானம் | பட்டியல் படுத்தப்பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் | மதிப்பிடப் பட்ட வருமானம் | பட்டியல் படுத்தப்பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ள வாறான மொத்த நிலுவைகள் |
| -------------------- | -------- | -------- | -------- | -------- | -------- | -------- | -------- | -------- |
| | ரூபா "000" | ரூபா "000" | ரூபா "000" | ரூபா "000" | ரூபா "000" | ரூபா "000" | ரூபா "000" | ரூபா "000" |
| வீதவரிகள் | 28,516 | 27,405 | 25,467 | 24,750 | 27,000 | - | 20,609 | 22,812 |
| வாடகை | 7,247 | 8,367 | 5,443 | 4,365 | 2,291 | - | 2,495 | 1,441 |
| அனுமதி பத்திர கட்டணம் | 6,405 | 2,171 | 2,171 | 99 | 7,000 | - | 4,222 | 99 |
| ஏனைய வருமானங்கள் | 13,019 | - | 14,391 | - | 8,348 | - | 13,651 | -- |
| மொத்தம் | **55,187** | **37,943** | **47,472** | **29,214** | **44,639** | -------- | **40,977** | **24,352** |

### 2.2.2 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| அ) | வீதவரி மற்றும் வரி<br>2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தெகையில் ஆதனவரி நிலுவை ரூபா 24,749,567 இனை அறவீடு செய்வதற்கு ஒன்று தொடக்கம் எட்டு வருடத்திற்கும் மேலாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஆதனவரி நிலுவைகளை அறவிடுவதற்காக K படிவத்தில் நிலுவைத் தொகை குறிப்பிடப்பட்டு வழங்கப்பட்டு வருகின்றது. 2022 ஆம் ஆண்டு ஆதனவரி அறவீடு நடமாடும் சேவை மூலமாக வருமானம் சேகரிக்கப்பட்டுள்ளது | நிலுவைகளை அறவிட உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |
| ஆ) | ஏனைய வருமானங்கள்<br>1987ம் ஆண்டு 15ம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 149 வது பிரிவிற்கமைய இலங்கை சுற்றுலா சபையில் பதிவு செய்யப்பட்டுள்ள சபை எல்லைக்குள் செயற்படுகின்ற 05 சுற்றுலா விடுதியிடமிருந்து கட்டணங்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை. | கொவிட் தொற்று மற்றும் 2022 இல் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி, மற்றும் பயணிகள் வருகை இன்மையினால் வருமானம் குறைவாக காணப்பட்டது. இதன் காரணமாக வரி செலுத்தவில்லை என தெரிவிக்கின்றார்கள். | சபைக்குரித்தான வருமானத்தை அறவிட உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

### 2.2.3 முத்திரைக் கட்டணங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள |
|---|---|---|
| 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிழக்கு மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்து பிரதேச சபை நிதியத்திற்கென கோரி அறவிடப்பட்டிருக்க வேண்டிய ரூபா 39,070,250 இனையும் அறவிடப்பட்டிருக்கவில்லை | இதனைப் பெற்றுக் கொள்வதற்கான தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது | பிரதேச சபைகள் நிதி நிர்வாக ஒழுங்கு விதி 81 ற்கமைவாக பெற்றுக்கொள்ளப்படல் வேண்டும் |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| அ) | திண்மக்கழிவு முகாமைத்துவம் தொடர்பில் சபையால் CGL நிறுவனத்துடன் 2017 ஆம் ஆண்டு உடன்படிக்கை மேற்கொள்ளப் பட்டிருந்ததும், உறுதிப்பாடுகள் கணக்காய்வுத்திகதி வரை அமுல்படுத்தப் படுத்தப்பட்டிருக்கவில்லை.<br>உடன்படிக்கை பிரிவு 2.3 இற்கமைவாக சபையில் சேகரிக்கப்படும் கழிவுகளை பயோ-எத்தனல், வெப்பமூட்டும் துகள்கள், உரம், ஹைட்ரஜன், விலங்கு உணவு மற்றும் நீர்ப்பாசன முறை போன்ற வர்த்தகப் பொருட்களாக | ஒப்பந்தத்தின் பிரகாரம் அனைத்து செயற்பாடுகளும் குறித்த CGL நிறுவனத்தால் முன்னெடுக்கப்பட்டிருத்தல் வேண்டும். எனினும் அவ்வாறு மேற் கொள்ளப்பட்டிருக்கவில்லை. குறித்த ஒப்பந்தத்தில் கூறப்பட்டதற்கு அமைய CGL செயற்பாடொன்றினை நிறை வேற்றப்படும்போது இத் திட்டத்திற்கான எமது சபையின் பங்களிப்பும் வழங்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். | ஒப்பந்தத்தின் பிரகாரம் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மாற்றப்பட்டிருக் கவில்லை. முறையற்ற கழிவகற்றல் பொறிமுறையினால் காட்டுவிலங்குகள் மற்றும் சுகாதார பிரச்சனையும் காணப்படுகின்றது. | | |

**3.2 பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள் மற்றும் உபகரணங்கள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| i) | தனியார் காணிகளை உப பிரிவிடலின் போது பிரதேச சபையின் பொதுப்பயன் பாட்டிற்காக ஒதுக்கப்பட்ட பத்து சதவீதமான 01A 07R 7.29P விஸ்தீரணமுள்ள காணிகள் பிரதேச சபையினால் எவ்விதமான பொதுப் பயன்பாட்டிற்காக பயன்படுத்தப்படாது 05 ஆண்டுகளுக்கு மேலாக உள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது. | இனி வருங்காலங்களில் இக் காணிகளை பயன்பாட்டிற்கு உட்படுத்துவதற்கு எமது முழு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப் பட்டு வருகின்றது. | பயன்படுத்துவதற்கு உரிய நடவடிக்ககைகள் எடுக்கப்படல் வேண்டும். |
| ii) | புறநெகும திட்டத்தின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் 2014 ஆம் ஆண்டு நிர்மாணிக்கப்பட்ட 16 கடைகளைக் கொண்ட கடைத் தொகுதியில் 03 கடைகள் 2014 ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரை வாடகைக்கு வழங்கி வருமானம் உழைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | இரண்டு கடைகள் எவ்வித கோரல்களும் கிடைக்கப் பெறவில்லை | வருமானம் உழைப்பதற்கு ஏதுவாக கடைகளை வாடகைக்கு வழங்கப்பட வேண்டும் |

**3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| **அ)** | **பராமரிப்பு மற்றும் திருத்தங்கள் செய்யப்படாமை** | | |
| | சபைக்குரிய எட்டு வாகனங்கள் திருத்தம் செய்யப்பட வேண்டிய நிலையிலிருந்தும் திருத்தங்கள் மேற்கொண்டு சபையின் பாவனைக்கு உட்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வாகன திருத்தம் தொடர்பாக உரிய இயந்திரப் பொறியியலாளரிடம் காண்பித்து பொருத்தமான திருத்துமிடத்தில் திருத்தம் செய்யப்பட்டு வாகனம் எமது சபைக்கு கூடிய விரைவில் மீள கொண்டுவரப்படும் | திருத்தம் செய்து சபையின் பாவனைக்குட்படுத்துவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

**3.4 ஒப்பந்த நிர்வாகத்திலுள்ள குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| அ) | கிராமிய வீதிகள் மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சின் 2021 ஆம் ஆண்டின் கிராமிய வீதி அபிவிருத்தி நிகழ்ச்சி திட்டத்தின் (RRDP) கீழ் பட்டினமும் சூழலும் பிரதேச சபையின் கீழ் உள்ள 08 வீதிகள் மற்றும் 03 வடிகாண்களுக்கு கொங்கிறீட் இட்டு செப்பனிடுவதற்காக கூட்டு மொத்தம் | | |

| | | | |
|---|---|---|---|
| | கூட்டு மொத்தம் ரூபா 17,472,215 தொகையானது செலவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. | | |
| i) | நிர்மாணிக்கப்பட்ட 03 வீதிகளில் 08 இடங்களில் பாரியளவான வெடிப்புகள் காணப்படுகின்றன. | RRDP வேலைகள் 2021 வருட இறுதியில் முடிவடைந்து பராமரிப்பு காலத்தில் ஏற்பட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்யுமாறு நேரடியாக சனசமூக நிலையங்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. | குறைபாடுகளை நிவர்த்தி செய்ய உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |
| ii) | நிர்மாணிக்கப்பட்ட 02 வீதிகளின் மேற்பரப்பில் ஆழமான $0.683m^3$ அளவுடைய குழிகள் (Pits) காணப்படுகின்றன. | ஒப்பந்தகாரராகிய சனசமூக நிலையத்திற்கு அறிவுறித்திய போதும் கொடுப்பனவுகள் முழுமையாக செய்யப்படாமையால் சிரத்தை இன்றி இருந்தனர். சபையினால் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும். | குறைபாடுகளை நிவர்த்தி செய்ய உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |
| iii) | நிறைவு செய்யப்படாத வேலைகளிற்கான கூட்டுமொத்தம் ரூபா 300,000 பெறுமதியானது தொழில்நுட்ப உத்தியோகத்தர்களின் நிறைவு செய்யப்பட்டதாக சிபாரிசு செய்யப்பட்டு கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டுள்ளது. | மேற்படி விடயம் தொடர்பாக சபையினால் உடனடியாக நடவடிக்கைகள் எடுக்கப்படும். | பூரணப்படுத்தப்படாத வேலைகளிற்கு வழங்கப்பட்ட கொடுப்பனவுகள் தொடர்பில் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |
| iv) | கொங்கிறீட் இடப்பட்டு நிறைவு செய்யப்பட்ட வீதிகளில் இரு மருங்கிலும் மரம் நடுவதற்காக கூட்டு மொத்தம் ரூபா 80,000 தொகையானது ஒதுக்கீடு செய்யப்பட்டு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும் அவ் வேலைத்திட்டமானது நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை. | மரம் நாட்டுதல் தொடர்பில் ஒப்பந்தகாரரால் செய்யப்படாதுவிடின் பிடிகாசிலிருந்து அறவிட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் | குறைபாடுகளை நிவர்த்தி செய்ய உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

**3.5 இனங்காணப்பட்ட நிதி மோசடி**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| ஆதனவரி தொடர்பிலான பணக் கொடுக்கல் வாங்கல்கள், பற்றுச்சீட்டு தயாரித்தல், பற்றுச்சீட்டுக்கள் வழங்குதல் போன்ற கடமைகள் வேலைக்களத் தொழிலாளி மற்றும் அலுவலக உதவியாளர் ஈடுபட சபை அனுமதித்திருந்ததுடன் இதன் மூலம் ரூபா 3,421,402 ஆன நிதி மோசடி ஏற்பட்டிருந்தது. இந் நிதி மோசடித் தொகையும் மேற்படி நிலுவைத் தெகைக்குள் உள்ளடக்கப்பட்டுள்ளது. | நிதி மோசடி நடைபெற்றுள்ளதாக கண்டுபிடிக்கப்பட்டமையைத் தொடர்ந்து, நீதிமன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | உரிய உத்தியோகத்தருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டுமென்பதுடன் நிதியினை மீளப் பெற்றுக்கொள்ளவும் வேண்டும் |

### 3.6 மனித வளங்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| அ) ஊழியர் கடன் | | |
| i) மீளாய்வாண்டில் ஆதனவரி நிதி மோசடியுடன் தொடர்புபட்ட அலுவலக காரியாலய உதவியாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய இடர்கடன் ரூபா 227,500 இனையும், தாமாக சேவையிலிருந்து விலகிய வருமான பரிசோதகரிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய ரூபா 64,616 இனையும் மீளாய்வாண்டு இறுதிவரை அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் | தீர்வு செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும் பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|
| சபையின் செலவுகள் தொடர்பில் பாதிடப்பட்ட செலவுகளிற்கும் உண்மையான செலவினத்திற்குமிடையே 15% முதல் 78% வரையான வீச்சில் முரண்கள் அவதானிக்கப்பட்டன. | நாட்டில் நிலவிய பொருளாதார பிரச்சினை மற்றும் பொருட்களின் விலையேற்றமுள்ளிட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக எதிர்பாக்கப்பட்ட சில செலவுத்தலைப்புகளில் முரண்கள் ஏற்பட்டுள்ளது இவ்வருடம் பாதீட்டை வினைத்திறனான பாதீடாக தயாரிப்பதில் கூடிய பிராயத்தனம் மேற்கொள்ளப்படும் | பாதீட்டினை தர்க்க ரீதியாக தயாரிக்க உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |